# புகழ்க்கொடி பட்டொளி வீசட்டும்

ஏ. நடராஜன், சென்னை தொலைக்காட்சி நிலைய முன்னாள் இயக்குநர்

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள். சென்னையில் செட்டிநாடு வித்யாஸ்ரம் அரங்கு நிரம்பி வழிந்துகொண்டிருந்தது. அரங்கத்தில் நானும் இருந்தேன். என் இரு பக்கத்திலும் இரு மேதைகள் அமர்ந்திருந்தார்கள். இடது பக்கம் பிரபல இசை விமரிசகர் கே.எஸ். மகாதேவன் இருந்தார். மேடையில் அன்று இசை நிகழ்ச்சி நடத்தியவரும் ஒரு மேதைதான். சுதா ரகுநாதன். இசை பிரவாகம் எடுத்துப் பொங்கிவழிந்து கொண்டிருந்தது.

சுதா தனது மூன்றாவது பாடலைத் தொடங்கினார். தான் பாடப் போகும் ராகத்தை அவர் லேசாகத் தொட்டுக் காட்டியதுமே ஒரு ஐந்து வினாடிகளுக்குள் என் வலது பக்கம் அமர்ந்திருந்தவர் என் பக்கம் சாய்ந்து என் காதருகே 'இது மணிரங்கு ராகம். அடடா! அற்புதம். இந்த மணிரங்குவை சித்தூர் சுப்பிரமணியன் அவர்கள் அந்தக் காலத்தில் விஸ்தாரமாகப் பாடும்போது அப்படியே சொக்கிப் போவோம். காதில் தேன் வந்து பாயுது என்பார்களே, அந்த சுகானுபவம்தான்' என்றார். என் வலது புறம் அமர்ந்திருந்த மேதை வேறு யாருமில்லை. நமது யக்ஞராமன்தான். கிருஷ்ண கான சபாவின் செயலாளர்.

இசை சபாக்கள் நடத்துபவர்களுக்கு அல்லது அவற்றின் நிர்வாகிகளுக்கு நிர்வாகம் தெரியுமே தவிர சங்கீத ஞானம் இருக்காது என்று பொத்தாம் பொதுவாக சிலர் விமரிசனம் செய்வதுண்டு. இது எனக்குக் கொஞ்சமும் உடன்பாடில்லாத கருத்து. எனக்கு வலு சேர்க்கும் விதமாக மணிரங்குவை சட்டென அடையாளம் கண்டு சொல்லி அந்த பொத்தாம் பொது வாதத்தைச் சுக்குநூறாக உடைத்தெறிந்தார் யக்ஞராமன்.

என் மாமனார் நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன், முகர்சிங் கலைஞர் புதுக்கோட்டை மகாதேவன் ஆகியோர் மூலம் எனக்குக் கிடைத்த யக்ஞராமன் அவர்களின் அறிமுகம் நட்பாக இறுகி இன்று கிட்டத்தட்ட முப்பது வருடங்களாகின்றன. அன்று பார்த்த அதே சுறுசுறுப்பு இன்றும் அவரிடம் நிலைத்திருப்பதை நான் பார்த்து மகிழ்கிறேன்.

திருச்சி வானொலி நிலையத்தில் பணியாற்றிக்கொண்டிருந்தபோது ஆண்டுதோறும் நான் தியாகராஜர் உத்சவத்துக்குச் சென்றுவிடுவேன். அப்போது அங்கே யக்ஞராமனைச் சந்திப்பேன். மிடுக்கான நடையுடன் அவர் வருவதே ஒரு கண்கொள்ளாக் காட்சி. அதே மிடுக்கு, கம்பீரத்தை இன்றும் நான் அவரிடம் காண்கிறேன்.

அந்த சுறுசுறுப்பும் கம்பீரமும்தான் இன்று பொன்விழா காணும் கிருஷ்ண கான சபாவின் வெற்றிக்குப் பின்னணி என்பது என் கருத்து.

அந்த நாட்களில் கச்சேரி ஏற்பாடுகளைச் செய்யும்போது, கலைஞர்களுக்குத் தேதி உறுதி செய்து கடிதம் எழுதும்போது அச்சடித்த லெட்டர் ஹெட் எல்லாம் கிடையாது. டைப் செய்யும் முறையும் இல்லை. வெறுமனே இன்லாண்ட்

கடிதம்தான். அதில் நான்கு அல்லது ஐந்து வரிகளில், 'உங்கள் கச்சேரி இந்தத் தேதியில்..... சம்மதமா?' என்று கேட்டு எழுதி யக்ஞராமன் இடும் கையெழுத்துக்கு அப்படியொரு மதிப்பு!

அந்த இன்லாண்ட் லெட்டர் வராதா என்று ஏக்கத்துடன் எதிர்பார்த்துக் காத்திருந்த கலைஞர்கள் பலர்.

யக்ஞராமன் அவர்கள் புதுத் திறமைகளை ஊக்குவிக்கும் பாங்கு மகத்தானது. வளரும் கலைஞர்களுக்கு நிழல் தரும் ஆலமரம் அவர்.

பரிவு, பாசம், அன்பு, கலை உணர்வு போன்ற பல்வேறு அம்சங்களின் சரியான விகிதக் கலவைக்கு இன்னொரு பெயர் யக்ஞராமன்.

கிருஷ்ண கான சபாவின் தலைவர் டாக்டர் நல்லி குப்புசாமி செட்டியார் பல மேடைகளில் தெளிவுபடுத்தி வருவது போல், இச்சபாவின் சிறப்பே ஆண்டு முழுவதற்கும் மிகச் சரியாக விழாக்களை பங்கீடு செய்வதுதான்.

கோகுலாஷ்டமி விழா இசை நிகழ்ச்சிகளுக்கெனவும், டிசம்பரில் நாட்டிய விழாவும், நாடகத்துக்கென ஒரு விழா ஏப்ரல் - மே மாதங்களிலும், தை மாதத்தில் நாகஸ்வர இசை விழா என்றும் ரசிகர்களுக்கு கலை விருந்தை பரவித் தரும் யுக்தி பாராட்டுக்குரியது. பக்திச் சுவையை அள்ளித்தரும் உபந்நியாசங்களும் உண்டு.

கிருஷ்ண கான சபாவின் நிகழ்ச்சிகள் பலவற்றை நான் இசை விமரிசகர் சுப்புடு அவர்களோடு அமர்ந்து ரசித்திருக்கிறேன். அதை என் பேறாகவே கருதுகிறேன்.

சில சபாக்களுக்கு சில அதிர்ஷ்டம் உண்டு. அப்படிப்பட்ட அதிர்ஷ்ட சபா யக்ஞராமனின் கிருஷ்ண கான சபா. இங்கே எல்லா நிகழ்ச்சிகளும் முழுமையாக அமைந்து கலைஞர்களுக்கும் திருப்தி உண்டாகும். ரசிகர்களையும் மகிழ்விக்கும்.

சபாவுக்கென பல நிர்வாகிகள் இருந்தும், யக்ஞராமனின் கிருஷ்ண கான சபா என்று நான் சொல்வது பொருத்தமே என்று நம்புகிறேன்.

அன்று முதல் இன்று வரை கிருஷ்ண கான சபா என்ற பெயரைச் சொன்னால் யக்ஞராமன் என்ற பெயரும் இணைந்தே நினைவுக்கு வருகிறது என்றால், அது ஒன்றே அவரது திறமையான செயல்பாட்டுக்கு உதாரணம்.

பொன்விழா கொண்டாடும் கிருஷ்ண கான சபாவின் புகழ்க்கொடி ஓங்கிப் பறந்து, கலைஞர்களையும், ரசிகர்களையும் ஒரு சேர இன்னும் பல்லாண்டுகளுக்கு மகிழ்விக்க வேண்டும் என்று ஒரே நோக்கத்தோடு, ஒன்றாகவே நினைத்து, ஒன்றாகவே செயல்படும் கிருஷ்ண கான சபாவின் தலைவர், செயலாளர் மற்ற செயல் உறுப்பினர்களுக்கு கலை ரசிகர்களின் ஆதரவு என்றும் நூறு சதவிகிதம் உண்டு.

வளர்க கிருஷ்ண கான சபாவின் புகழ்.